**தமிழ்நாடு அரசு**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**
**வட்டாட்சியர் அலுவலகம், சோளிங்கர்**
**இராணிப்பேட்டை மாவட்டம்**

**கூடுதல் அறிவிக்கை எண். அ2/1881/2025** **நாள்: 14.10.2025**

அரசு கடிதம் எண்.(MS)No.636 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை Ser.8(1)/2025 நாள்:18.09.2025-ன்படி கிராம உதவியாளர் பணி நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்வது குறித்து வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படி இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில் சோளிங்கர் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட கடந்த 07.07.2025 அன்று வழங்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பேரிலான திருத்தல் விளம்பரம் கீழ்கண்டவாறு வெளியிடப்படுகிறது. இத்திருத்தல் விளம்பரத்தின் அடிப்படையில் மேற்படி பணிக்கு விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**குறிப்பு: மேற்குறிப்பிட்ட கிராம உதவியாளர் பணிக்காக ஏற்கனவே கடந்த 07.07.2025 நாளிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பம் செய்த நபர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை. மேற்படி நபர்கள் ஏற்கனவே அளித்த விண்ணப்பங்கள் மீண்டும் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்படும்.**

அ) விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 29.10.2025 மாலை 5.45 மணிக்குள்.

ஆ) எழுதுதல் திறனறித் தேர்வு நாள்: 09.11.2025

இ) நேர்முகத் தேர்வு :17.11.2025 முதல் 22.11.2025 வரை

| | | | |
|---|---|---|---|
| பதவியின் பெயர் : | | கிராம உதவியாளர் | |
| சம்பள விகிதம் : | | சிறப்பு காலமுறை ஊதியம் – ரூ.11,100 – 35,100/- | |
| வட்டத்தின் பெயர் : | | சோளிங்கர் | |
| வ.எண் | நிரப்பப்படும் கிராமத்தின் பெயர் | காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி விவரம் |
| 1 | செக்கடிக்குப்பம் | 01 | General Turn (NP) பொதுப் பிரிவினர் (முன்னுரிமையற்றவர்) |
| 2 | பொன்னப்பந்தாங்கல் | 01 | Scheduled Castes (NP) (W) (DW) / பட்டியல் இனத்தவர் (முன்னுரிமையற்றவர்) (மகளிர்) (ஆதரவற்ற விதவை) |
| 3 | சூரை | 01 | Most Backward Classes and Denotified Communities (General) (NP) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது) (முன்னுரிமையற்றவர்) |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு தேர்வில் (10-ஆம் வகுப்பு / SSLC) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு – SSLC – (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்)<br>(குறைந்தபட்ச கல்வித்தகுதி – பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி அடையவில்லை என்றாலும் விண்ணப்பிக்கலாம்.) |
| இதர தகுதி | 1.விண்ணப்பதாரர் சோளிங்கர் வட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2.தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.விண்ணப்பதாரர்கள் சோளிங்கர் வட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், சோளிங்கர் வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராமபணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| வயதுவரம்பு<br>(01.07.2025 அன்று) | குறைந்தபட்ச வயது – 21வயது - (அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிகபட்ச வயது – 32 வயது – பொதுப் பிரிவினர்கள் (OC/GT)<br>– 39 வயது – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (BC /MBC/ DNC)<br>– 42 வயது - பட்டியலினத்தவர் / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (SC /ST/ Destitute Widow)<br>**<u>முன்னாள் இராணுவத்தினருக்கு</u>**<br>50 வயது – இதர வகுப்பினருக்கு<br>55 வயது – பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர்.<br>(அரசாணை (நிலை) எண்.91, மனித வள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்:13.09.2021-ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br>**<u>மாற்றுத்திறனாளிகளுக்கு</u>**<br>அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். |
| விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்ப படிவம், தேர்வு முறை குறித்த இதர விவரங்களை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதள முகவரி https://ranipet.nic.in/ மற்றும் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். விண்ணப்பத்தினை மேற்காணும் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவண இணைப்புகளுடன் 29.10.2025 மாலை 5.45 மணிக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.<br><br>**"வருவாய் வட்டாட்சியர்<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>சோளிங்கர் வட்டம்,<br>இராணிப்பேட்டை மாவட்டம்"**<br><br>வட்டாட்சியர்<br>சோளிங்கர் |